**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 192 /2022 PW2**

10.03.2026 **வா..சா.2 ரங்கநாதன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி அய்யாசாமி மீது வழக்கு போட்டுள்ளார். இந்த வழக்கில் 82 செண்ட் நிலம் சம்மந்தப்பட்டுள்ளது. ஆனால் அந்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தை விற்பனை செய்யப்போவதாக 1ம் பிரதிவாதி 29.08.2019 அன்று எங்களிடம் சொன்னார். கோவிந்தன், தமிழரசன் மற்றும் என் முன்னிலையில் அவ்வாறு சொன்னார். வழக்கு சொத்திற்கு விலையை யார் நிர்ணயம் செய்தார்கள் என்று கேட்டால் அய்யாசாமி, கோவிந்தன், தமிழரசன் ஆகிய மூவரும் நிர்ணயம் செய்தார்கள். எதன் அடிப்படையில் விலையை நிர்ணயம் செய்தோம் என்றால் மார்க்கெட் மதிப்பில் நிர்ணயம் செய்தோம். மொத்த செண்டிற்கு மேற்கண்டவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மதியம் சுமார் 2 - 3 மணியளவில் பத்திரம் எழுதச் சென்றோம். நான், கோவிந்தன், தமிழரசன் ஆகியோர் சென்றோம். பத்திரத்தை துரை என்பவர் எழுதினார், சுரேஷ் என்பவர் தட்டச்சு செய்தார். அந்த பத்திரத்தில் 3 ஆண்டுகள் கால அவகாசம் நிர்ணயம் செய்யப்பட்டது. 3 வருடத்திற்குள் மீதி கிரையத் தொகையை கொடுக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ரூ. 9,75,000/- கிரைய ஒப்பந்தப் பத்திரம் எழுதும் போதே கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் ரூ. 50 ஆயிரம் கொடுப்பதற்கு 3 ஆண்டுகள் கால அவகாசம் எடுத்துக் கொண்டதற்கான காரணம் என்ன என்றால் கோவிந்தனுக்கு விபத்தில் காயம் ஏற்பட்டு விட்டது அதனால் அவர் நடக்க முடியவில்லை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காரணத்தால் அதனால் பணம் இருந்தும் கொடுக்க முடியவில்லை. அய்யாசாமியும் 5 - 6 வருடங்களாக ஊரில் இல்லை. கோவிந்தனுக்கு 2022ம் வருடம் விபத்து ஏற்பட்டது. மாதம், தேதி எனக்கு தற்போது நியாபகம் இல்லை. எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை மருத்துவமனையில் இருந்தார் என குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. 2022ல் இருந்து இது நாள் வரை அய்யாசாமி ஊரில் இல்லை. எந்த மாதம் என்று குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் முடியாது. அய்யாசாமி தற்போது சென்னையில் உள்ளார். அய்யாசாமி என்னிடம் கொடுத்த போன் எண்ணிற்கு நான் தொடர்பு கொண்ட போது சுவிட்ச் ஆப் என வந்தது. எனது நிருபண வாக்குமூலத்தில் பக்கம் 2 பத்தி 5ல் வாதி எந்த போன் எண்ணில் இருந்து பிரதிவாதியிடம்

தொடர்பு கொண்டு பேசினார் என்றால் எனக்கு போன் எண் தெரியாது. அவ்வாறு வாதி பிரதிவாதியை போன் மூலம் அழைத்ததாக சொல்வது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து நடந்ததாக சொல்லப்படுவதற்கு முன்பாகவே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டார் என்றும், 21.07.2022 தேதி வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பிரதிவாதி வாதிக்கு கடன் பொறுப்பிற்காகத்தான் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி, வாதியிடம் ரூ. 6 லட்சம் தான் கடன் பெற்றார் என்றால் சரியல்ல ரூ. 9,75,000/- கடன் பெற்றார். கோவிந்தன் எனது அண்ணன் மகன் ஆவார். வாதி எனது அண்ணன் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.